# உங்கள் குழந்தையின் 4-ஆம் ஆண்டு உடல்நலப் பரிசோதனைக்கு முன்பாக

நீங்கள் வருவதற்கும் முன்பாக இணையதளத்திலுள்ள 'வளர்ச்சி நிலை குறித்த பெற்றோரது மதிப்பீடு' (Parent Evaluation of Developmental Status (PEDS)) எனும் மொழிபெயர்க்கப்பட்ட பிரதியினை www.mhcs.health.nsw.gov.au அச்சிட்டு, அதனைப் பூர்த்திசெய்து எடுத்து வாருங்கள், அல்லது உங்களது குழந்தையின் உடல்நலத் தாதியை உங்களுக்கு உதவுமாறு கேளுங்கள்.

## நான்கு வருடங்கள் ஆகும் போது பள்ளியில் சேர்ப்பதற்கும் முன்பாக செய்யப்படும் சோதனை

## உடல்நல மதிப்பீடு

உங்கள் குழந்தை பள்ளிப் படிப்பைத் துவங்கும் முன்னர் உடல்நலப் பரிசோதனை ஒன்றிற்காக உங்களது உள்ளூர் 'குழந்தை மற்றும் குடும்பநலத் தாதி'யிடமோ அல்லது மருத்துவரிடமோ உங்கள் குழந்தையை அழைத்துச் செல்லுமாறு சிபாரிசு செய்யப்படுகிறது. உங்களால் செல்ல இயலவில்லை என்றால், நண்பர் அல்லது உறவினர் ஒருவரை உங்கள் குழந்தையை அழைத்துச் செல்லுமாறு நீங்கள் கேட்கலாம். உடல்நல மதிப்பீட்டில் கீழ்வருவன உள்ளடங்கும்.

- காது கேட்கும் திறன்
- கண் பார்வை
- உடல்சார் (உயரம், எடை, நடக்கும் பாணி) சோதனை
- உங்கள் குழந்தையின் முன்னேற்றம் குறித்த கேள்விகள்
- தடுப்பு மருந்து குறித்த தகவல்கள்

உங்கள் குழந்தையின் கற்றல் திறனைப் பாதிக்கவல்ல எவ்வொரு பிரச்சினை குறித்தும் உங்களது தாதி, மருத்துவர் அல்லது ஆசிரியருடன் பேசுமாறு நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

## 4 ஆண்டுகள் ஆகும் போது செய்யப்படும் விதை (testes) ப் பரிசோதனை

ஆண் குழந்தையின் விதைப் பைக்குள் இருக்கும் விதைகள் கண்ணுக்குத் தெரிய வேண்டும் அல்லது தொட்டுப் பார்த்தால் அவை இருப்பதை நீங்கள் உணர வேண்டும். ('Testes' எனப்படும் விதைகளை 'testicles', அல்லது பிரபலமாக 'balls' என்று சொல்லுவர். பொதுவாக, விதைகள் சிறிதளவு வெவ்வேறு மட்டங்களில் காணப்படும். வெவ்றே நேரங்களில் விதைகள் உயர்ந்தோ அல்லது தாழ்வாகவோ காணப்படுவது சாதாரணமானதுதான் (உதாரணமாக குளிராக இருக்கும் போது உயர்ந்து காணப்படும்), இருப்பினும், சில சமயங்களில் விதைப் பையின் அடிமட்டத்தில் விதைகள் இருப்பது காணப்பட வேண்டும். உங்களது பையன் கதகதப்பாகத் தளர்வுற்றிருக்கும் வேளைகளில், உதாரணமாக குளியலறையில் இருக்கும்போது, விதைகளைப் பரிசோதிப்பது அநேகமாக மிகவும் இலகுவாயிருக்கும்.

இரண்டு விதைகளையும் தெளிவாய் உங்களால் பார்க்க இயலவில்லையெனில், இரண்டு விதைகளும் இருக்கின்றனவா என அறியும் பொருட்டு விதைப் பையை நீங்கள் மெதுவாய்த் தொட்டுப் பார்க்க வேண்டும். அவனது விதைகள் சரியான இடத்தில் இருக்கின்றனவா என அறிவது அவசியம் என்பதை உங்கள் மகனுக்குத் தெரியப்படுத்துங்கள், ஆனாலும் இது பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றும் அவனிடம் சொல்லுங்கள். உங்கள் கைகள் வெதுவெதுப்பாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளுங்கள், ஏனெனில், குளிர்ச்சியான கையால் தொடும் போது சாதாரணமாக இருக்கும் விதையானது விதைப்பைக்குள்ளாக மேல் நோக்கி நகர்ந்துவிடும். உங்கள் மகனின் ஒரு அல்லது இரண்டு விதைகளையும் பார்க்கவோ அல்லது தொட்டுப் பார்க்கவோ முடியாவிட்டாலும், அல்லது உங்களால் இவற்றை சோதித்துப் பார்க்க இயலாவிட்டாலும், தயவு செய்து மருத்துவர் மூலமாக இவற்றை நீங்கள் சோதியுங்கள். உங்கள் மகனின் உடல்நலப் பரிசோதனையின் போது இது குறித்து மருத்துவரோ அல்லது தாதியோ உங்களுடன் தாராளமாய்ப் பேசுவர்.

| பெற்றோர் கேள்விகள் கண்பார்வை மற்றும் காது கேட்கும் திறன் | ஆம் | இல்லை | உறுதியாய்த் தெரியவில்லை |
|---|---|---|---|
| உங்கள் குழந்தையின் கண் பார்வை குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்களா? | ☐ | ☐ | ☐ |
| உங்கள் குழந்தைக்கு நேரற்ற கண் (turned eye (Squint )) அல்லது செயல்திறன் குறைந்த கண் (lazy eye (strabismus)) இருக்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| தற்சமயம் கண்பார்வைக்கான சிகிச்சை உங்கள் குழந்தைக்கு அளிக்கப்படுகிறதா? | ☐ | ☐ | ☐ |
| உங்கள் குழந்தையின் காது கேட்கும் திறன் குறித்து கவலைப்படுகிறீர்களா? | ☐ | ☐ | ☐ |
| கடந்த ஆண்டில் உங்கள் குழந்தைக்குக் காதில் கசிவு ஏதும் இருந்திருக்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| கடந்த ஆண்டில் நான்கு முறைகளுக்கும் மேலாக உங்கள் குழந்தைக்குக் காதில் நோய்நுண்மத் தாக்கல் (infection) ஏற்பட்டிருக்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| சளி பிடித்திருக்கும் போது உங்கள் குழந்தைக்குக் காது கேட்பது கடினமாக இருக்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| சொன்னதைத் திரும்பச் சொல்லுமாறு உங்கள் குழந்தை உங்களை அடிக்கடி கேட்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| நீங்கள் செய்யுமாறு சொல்வதைச் செய்வதில் உங்கள் குழந்தைக்குக் கஷ்டம் இருக்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| உங்கள் குழந்தை தெளிவாய்ப் பேசுகிறதா? | ☐ | ☐ | ☐ |
| பேசும் போது வார்த்தைகளைத் தொகுப்பாக உங்கள் குழந்தை பேசுகிறதா? | ☐ | ☐ | ☐ |
| நீங்கள் செய்யுமாறு சொல்வதை உங்கள் குழந்தை பின்பற்றுகிறதா? | ☐ | ☐ | ☐ |
| உரையாடல்களில் உங்கள் குழந்தை சுறுசுறுப்பாகப் பங்கேற்கிறதா? | ☐ | ☐ | ☐ |